**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**OS.No.58/2020 – PW-2**

| | |
|---|---|
| Name | திருமதி.மல்லிகா |
| Husband Name | திரு.நந்தகோபால் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **09.03.2026.**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

என் தங்கை 2-ம் வாதியான அம்மு என்பவரும், 1, 3 வாதிகளான எங்களுடன் சேர்ந்து பாகம் பிரதிவாதிகளிடம் தற்போது கேட்கவில்லை என்றாலும், அவர் பிரதிவாதிகளுக்கு சாதகமாக இருக்கிறார் என்றாலும் தவறு. நான் ஆசிரியர் பயிற்சி பட்டயப்படிப்பு முடித்து தற்போது அரசு பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். 3-ம் பிரதிவாதி செவிலியர் படிப்பு முடித்துள்ளார் என்றாலும், அவர் வேலைக்கு செல்லவில்லை என்றாலும் சரிதான். 2-ம் பிரதிவாதி 8-ம் வகுப்பு வரை படித்துள்ளார். எனக்கும், என் சகோதரிகளுக்கும் படிப்பு மற்றும் திருமணத்திற்கான செலவுகளை 1-ம் பிரதிவாதியான என் தாயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. என் தந்தை தான் செலவு செய்தார். என் தந்தை 1963-ம் ஆண்டு ராணுவத்தில் சேர்ந்தார். 16 ஆண்டுகள் ராணுவத்தில் பணி முடித்து, பணி ஓய்வு பெற்றார். அவர் ராணுவத்தில் பணிபுரிந்த போது எவ்வளவு சம்பாதித்தார் என்று எனக்கு தெரியாது. என் தந்தை இறக்கும் போது சுமார் ரூ.40,000/- பணி ஓய்வூதியத் தொகை பெற்றார். என் தந்தை ரூ.40,000/- பணி ஓய்வூதியத்தொகை பெற்றதாக மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றாலும், அவர் அவ்வளவு தொகை பெற்று வரவில்லை என்றாலும் சரியல்ல. என் தந்தை ரூ.40,000/- பணி ஓய்வூதியத்தொகை பெற்றதற்கான ஆவணம் உள்ளதா என்று எனக்கு தெரியவில்லை. ராணுவத்தில் பணிபுரிபவர்களுக்கு ஆண்டுக்கு 60 நாட்கள் விடுமுறை கிடைக்கும் என்றால் சரிதான். அவருடைய வருமானத்தில் வழக்கு சொத்து கிரையம் பெறவில்லை என்றாலும், அவருக்கும், வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் ஏதும் இல்லை என்றாலும் சரியல்ல. என் தாயார் அவருக்கு திருமணத்தின் போது கொடுக்கப்பட்ட நகைகளை விற்றும், அவர் பால் கறந்து விற்று சேமித்த தொகையை கொண்டும் வழக்கு 1, 2 சொத்துகளை அவர் பெயரில் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. என் தந்தை சாலை விபத்தில் இறந்ததற்கான இழப்பீடு தொகை இது வரை கிடைக்கப்பெறவில்லை என்றாலும், அந்த வழக்கை நான் தான் முன்னின்று நடத்துகிறேன் என்றாலும் சரியல்ல. என் தந்தையின் பெயரில் வங்கியில் எந்த பணமும் இல்லை என்றால்

சரியல்ல. 2–ம் பிரதிவாதி, 1–ம் பிரதிவாதியை மிரட்டி தானப்பத்திரம் வழக்கு 2–வது இனச் சொத்திற்கு எழுதி வாங்கியதாக நான் சொல்வது தவறு என்றாலும், அவ்வாறு மிரட்ட வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல. என் தாயார் இறப்பதற்கு 10 வருடங்களுக்கு மேலாக சிறுநீரக தொற்றுநோய் இருந்து வந்தது என்றால் சரியல்ல. 1–ம் பிரதிவாதியை நானும், 3–ம் வாதியும் என் கவனிக்கவில்லை என்றால் சரியல்ல. 1–ம் பிரதிவாதியின் மருத்துவ செலவிற்கு 2–ம் பிரதிவாதி தான் பல லட்சம் செலவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. 2–ம் பிரதிவாதி, 1–ம் பிரதிவாதியை துன்புறுத்தினார் என்று நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. என் தந்தையோ, 1–ம் பிரதிவாதியோ எந்த காலத்திலும் வழக்கு சொத்துகளில் பங்கு கொடுப்பதாக ஒப்புக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகளில் எங்களுக்கு பங்கு உள்ளதாக சொல்வதற்கு என் தந்தைக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு பி அட்டவணை சொத்தை பொறுத்து 1–ம் பிரதிவாதி, 2–ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ள தான செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது என்றால் சரியல்ல. 1–ம் பிரதிவாதி சுயமாக சம்பாதித்த சொத்து என்பதால் அவர் யாருக்கு வேண்டுமானாலும் அந்த சொத்தை தானமாக கொடுக்கலாம் என்றால் சரியல்ல. என் தாயாரின் மருத்துவ செலவுகளை செய்து, பணிவிடை செய்து வந்ததால் தான் அன்பின் பேரில் 1–ம் பிரதிவாதி, 2–ம் பிரதிவாதிக்கு வழக்கு பி அட்டவணை சொத்தை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.